ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.02.22 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2017 திசெம்பர்

### பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது பிரதானமாக சென்மதி நிலுவை நிதியியல் கணக்குகளுக்கான உயர்வான உட்பாய்ச்சல்களுடன் 2017 திசெம்பரில் தொடர்ந்தும் மேம்பட்டது. 2017 திசெம்பரில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உயர்வீதமொன்றில் அதிகரித்த போதிலும், இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதனை தோற்றுவித்தது. எவ்வாறாயினும், சுற்றுலாப் பயணிகளின் வருவாய்கள் வாயிலாக ஏற்பட்ட தொடர்ச்சியான உட்பாய்ச்சல்கள், விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவினைக் குறித்த மட்டமொன்றில் கட்டுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தன. குறுகிய கால மற்றும் நீண்ட கால மூலதன உட்பாய்ச்சல்கள், மாதத்தின் போது தொடர்ந்தும் மேம்பட்டன. வெளிநாட்டுத் துறையில் சாதகமான அபிவிருத்திகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017இல் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 2,068 மில்லியன் கொண்ட மிகையொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை, நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2017இன் இறுதியில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியனாகவிருந்தது. அதேவேளை, 2017இன் போது இலங்கை ரூபா.2.0 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [அ]

| வகை | திசெம்பர் 2016 ஐ.அ.டொ. மில் | திசெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - திசெ 2016 ஐ.அ.டொ. மில் | சன - திசெ 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 859 | 1,020 | 18.7 | 10,310 | 11,360 | 10.2 |
| இறக்குமதிகள் | 1,816 | 2,048 | 12.8 | 19,183 (ஆ) | 20,980 | 9.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -957 | -1,029 | | -8,873 (ஆ) | -9,620 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 386 | 420 (இ) | 8.8 | 3,518 | 3,631 (இ) | 3.2 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 685 | 671 | -1.9 | 7,242 | 7,164 (ஆ) (ஈ) | -1.1 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 28 | 11 | -60.1 | 19 | 279 | 1,359.8 |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் | 263 (ஆ) | 376 | 43.0 | 4,901 (ஆ) | 5,702 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 26 | 124 | 374.4 | 1,238 | 1,667 | 34.6 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 1,500 | |
| நீண்ட காலக் கடன்கள | 236 | 252 | | 1,463(b) | 1,535 | 4.9 |
| வெளிநாட்டு நாணய நியதிகளில் நிதியிடல் வசதிகள் | - | - | | 700 | 1,000 | |
| ப.நா.நி – விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் பெறுகைகள் | | | | | | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | - | 251 | | 332 | 419 | |
| திரண்ட நிலுவை | - | - | | 397 | 766 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதன் 2017 இற்கான அளவீட்டுப் பெறுபேறுகளை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருப்தியமைக்கப்படும்.

(ஈ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட திருத்திப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2017 திசெம்பரில் வர்த்தக கணக்கு பற்றாக்குறையானது 2012 நவெம்பருக்குப் பின்னர் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனையும் விஞ்சிய பதிவுடன் விரிவடைந்தது. ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறையானது 2017இன் போது வானிலையுடன் இணையப்பெற்ற காரணிகளால் தோற்றுவிக்கப்பட்ட உயர்வான இறக்குமதிச் செலவினத்தினைப் பிரதிபலித்து, ஏற்றுமதி வருவாய்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை எதிரீடு செய்தது.

**வரைபடம் 1: மாதாந்த வர்த்த நிலுவை**





மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

2017 திசெம்பரில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், ஐ.அ.டொலர் 1 மில்லியனை விஞ்சி ஆண்டின் போது ஐந்தாவது தடவையாக தொடர்ச்சியாக ஆறு மாதங்களாக இரட்டை இலக்க வளர்ச்சியொன்றினை (ஆண்டுக்கு ஆண்டு) பதிவுசெய்தது. புடவைகள் மற்றும் ஆடைகள் மூலம் உறுதுணையளிக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரித்த செயலாற்றம் இவ்வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களித்தது. 2017 மேயில் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட திட்டங்கள் + வசதி மீளக் கிடைத்தமையினைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அதிகரிக்கப்பட்ட ஏற்றுமதிகளுடன் 2017 திசெம்பரில் புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதி வருவாய்கள் கணிசமானளவில் தொடர்ந்தும் அதிகரித்து ஆண்டுக்கான அதிகூடிய பெறுமதியினைப் பதிவுசெய்தது. 2017 திசெம்பரின் போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 27.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகள் முறையே 18.0 சதவீதத்தினாலும் 14.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. மேலும், நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள் என்பனவற்றின் உயர்ந்த அளவுகள் மற்றும் விலைகள் என்பனவற்றின் ஒன்றிணைந்த விளைவாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017 திசெம்பரில் கணிசமமாக அதிகரித்தன. மேலும், பிரதானமாக டயர் ஏற்றுமதிகளின் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் மாதத்தின்போது அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, காய்கறிகள், பழங்கள் மற்றும் வித்துக்கள் தயாரிப்புக்கள் ஏற்றுமதிகளிலிருந்தான உயர் வருவாய்களின் காரணமாக 2017 திசெம்பரில் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதேவேளை, சராசரி ஏற்றுமதி விலைகளிலும் அளவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக, 2017 திசெம்பரில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் அதிகரித்து, வேளாண்மை ஏற்றுமதிகளில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. கடலுணவு மற்றும் சிறு வேளாண்மை உற்பத்திகளில் குறிப்பாக பழங்கள் மற்றும் வெற்றிலை போன்றவற்றிலிருந்தான வருவாய்களும் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு பங்களிப்புச் செய்தன.

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

திரண்ட ஒன்றுசேர்ந்த அடிப்படையொன்றில், ஏற்றுமதி வருவாய்கள், பிரதானமாக தேயிலை, புடவை மற்றும் ஆடைகள், அத்துடன் பெற்றோலிய உற்பத்திகளில் ஏற்பட்ட ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் காரணமாக 2017இல் ஐ.அ.டொலர் 11.4 பில்லியன் கொண்ட வரலாற்றிலேயே அதிகூடிய பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தன. இதற்கு மேலதிகமாக, வாசனைத் திரவியங்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதிகளும் 2017இன் போது ஏற்றுமதிகளில் அதிகரிப்பினை நோக்கி பங்களிப்புச் செய்தன. இருந்தபோதிலும், இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள், தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் தேங்காய் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் இவ்வாண்டின் போது வீழ்ச்சியடைந்தன. 2017இன் போது மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாள 50 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான முன்னனிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா (25.6%), ஐக்கிய இராச்சியம் (9.1%), இந்தியா (6.1%), ஜேர்மனி (4.7%) மற்றும் இத்தாலி (4.7%) என்பன அமைந்திருந்தன.

## அட்டவணை 2: ஏற்றுமதி வருவாய்கள்(அ)

| வகை | திசெம்பர் 2016 (ஐ.அ.டொ. மில்.) | திசெம்பர் 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன-திசெ 2016 (ஐ.அ.டொ. மில்.) | சன-திசெ 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **654.9** | **796.3** | **21.6** | **7,940.1** | **8,541.6** | **7.6** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 23.7 | 32.8 | 38.5 | 323.7 | 392.7 | 21.3 |
| விலங்குத்தீன் | 7.2 | 9.9 | 37.8 | 67.8 | 80.2 | 18.2 |
| புடவை மற்றும் ஆடைகள் | 393.6 | 470.0 | 19.4 | 4,884.1 | 5,031.9 | 3.0 |
| இதில் ஆடைகள் | 368.1 | 445.1 | 20.9 | 4,602.7 | 4,739.3 | 3.0 |
| புடவைகள் | 19.3 | 17.4 | (10.1) | 200.2 | 205.4 | 2.6 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 6.2 | 7.5 | 21.3 | 81.1 | 87.3 | 7.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 62.4 | 74.6 | 19.6 | 767.9 | 835.4 | 8.8 |
| இரத்தினக் கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் | 19.5 | 20.7 | 6.1 | 273.9 | 257.2 | (6.1) |
| பொறிகள் மற்றும் எந்திரச் சாதனங்கள் | 24.9 | 30.0 | 20.4 | 317.6 | 370.8 | 16.7 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.7 | 4.6 | (39.3) | 131.5 | 162.3 | 23.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 30.8 | 62.4 | 102.8 | 286.9 | 434.3 | 51.4 |
| இரசாயன உற்பத்திகள் | 11.1 | 12.4 | 11.7 | 126.3 | 146.4 | 16.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.0 | 12.7 | 6.0 | 116.7 | 138.8 | 19.0 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 12.1 | 4.3 | (64.6) | 42.4 | 48.8 | 15.3 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 11.2 | 14.1 | 25.7 | 165.6 | 158.4 | (4.4) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.7 | 8.1 | 41.9 | 66.3 | 74.6 | 12.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 6.9 | 10.2 | 48.3 | 89.6 | 115.9 | 29.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.9 | 2.9 | 1.1 | 34.4 | 33.7 | (1.9) |
| ஏனையவை | 23.2 | 26.4 | 13.5 | 245.5 | 260.2 | 6.0 |
| **2. வேளாண்மை உற்பத்திகள்** | **200.9** | **219.7** | **9.3** | **2,326.1** | **2,767.2** | **19.0** |
| தேயிலை | 109.8 | 126.9 | 15.6 | 1,269.0 | 1,529.8 | 20.5 |
| இறப்பர் | 3.2 | 3.3 | 0.9 | 32.7 | 38.9 | 19.1 |
| தெங்கு | 28.5 | 18.9 | (33.8) | 366.0 | 347.9 | (4.9) |
| வாசனைத்திரவியங்கள் | 32.0 | 32.6 | 2.1 | 317.1 | 406.2 | 28.1 |
| காய்கறிகள் | 1.7 | 2.0 | 18.8 | 26.5 | 28.5 | 7.5 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.5 | 4.9 | 95.3 | 31.2 | 36.5 | 17.1 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 5.7 | 9.4 | 65.9 | 114.1 | 138.7 | 21.6 |
| கடலுணவு | 17.4 | 21.5 | 23.5 | 169.6 | 240.6 | 41.9 |
| **3. கனிப்பொருள் மற்றும் ஏனையவை** | **3.2** | **3.5** | **10.7** | **43.5** | **51.4** | **18.0** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **859.0** | **1,019.5** | **18.7** | **10,309.7** | **11,360.2** | **10.2** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

இறக்குமதிகள் மீதான செலவினமானது முதற்தடவையாக ஐ.அ.டொலர் 2 பில்லியனை விஞ்சுவதனைப் பதிவுசெய்து, 2017 திசெம்பரில் அதிகரித்தது. இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் நிலக்கரி என்பவற்றின் அதிகரித்த விலைகள் மற்றும் இறக்குமதி அளவுகளின் காரணமாக ஏற்பட்ட எரிபொருள் மீதான செலவினம் பெருமளவிற்கு தூண்டுதலாக அமைந்தது. மேலும் இரும்பு மற்றும் உருக்குகளின் அதிக இறக்குமதிகளின் பிரதான காரணமாக உலோகங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. சராசரி விலைகளில் வீழ்ச்சியொன்று காணப்பட்ட போதிலும், உள்நாட்டுச் சந்தையில் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கான அரிசியின் இறக்குமதி காரணமாக 2017 திசெம்பரில் அரசி மீதான இறக்குமதிச் செலவினம் மேலும் அதிகரித்தது. தங்கம் இறக்குமதிகள் மீதான செலவினமானது அதிக அளவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கணிசமாக அதிகரித்தது. இதற்குப் புறம்பாக, வரவுசெலவுத் திட்டம் 2018இல் மின்வலு உந்துஊர்திகள் மீதான வரிகள் குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து மின்வலு உந்துஊர்திகள் இறக்குமதிகளின் காரணமாக தனிப்பட்ட ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது. எவ்வாறாயினும், சராசரி இறக்குமதி விலைகளில் பதிவாகிய அதிகரிப்புக்கு மத்தியிலும் இறக்குமதிச் செய்யப்பட்ட கோதுமையின் அளவுகளில் பதிவாகிய வீழ்ச்சியின் பிரதான காரணமாக கோதுமை மற்றும் சோளம் மீதான செலவினம் மாதத்தின் போது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. அத்துடன், பொறியியல் கருவிகள் மற்றும் மின் எந்திரங்கள் மற்றும் கருவிகளின் குறைவான இறக்குமதியின் பிரதான காரணமாக எந்திரங்கள் மற்றும் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. சிமெந்து சூளைக்கற்கள் (63.2 சதவீதம்) மற்றும் சிமெந்து (18.3 சதவீதம்) இறக்குமதி, மாதத்தின் போது வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




ஒன்றுசேர்ந்த அடிப்படையொன்றில், இறக்குமதிச் செலவினமானது 2017இல் ஐ.அ.டொலர் 21 பில்லியன் கொண்ட வரலாற்று ரீதியான அதிகூடிய பெறுமதியினைப் பதிவுசெய்தது. எரிபொருட்கள் மற்றும் அரிசி இறக்குமதி என்பன பாரியளவில் இதற்கு இட்டுச் சென்றன. இதற்குப் புறம்பாக, ஆண்டின் போது தங்கம் மற்றும் கோதுமை இறக்குமதிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது, எனினும், எந்திரங்கள் மற்றும் கருவிகள், சீனி, வாசனைத் திரவியங்கள் மற்றும் வளமாக்கி மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. 2017இன் போது மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாள 59 சதவீதத்திற்கு வகைகூறிய இந்தியா (21.4%), சீனா (18.8%), ஐக்கிய அரபு இராச்சியம் (7.5%), சிங்கப்பூர் (6.2%) மற்றும் யப்பான் (5.0%) என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கின.

## அட்டவணை 3: இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | திசெம்பர் 2016 (ஐ.அ.டொ. மில்.) | திசெம்பர் 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன-திசெ 2016 (ஐ.அ.டொ. மில்.) | சன-திசெ 2017 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **354.2** | **433.6** | **22.4** | **4,319.0** | **4,502.5** | **4.3** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 142.6 | 181.5 | 27.3 | 1,627.4 | 1,841.1 | 13.1 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.6 | 42.4 | 1,551.3 | 22.1 | 314.5 | 1,320.2 |
| இதில் அரிசி | 1.7 | 40.8 | 2,355.3 | 12.8 | 300.9 | 2,244.7 |
| பால் உற்பத்திகள் | 29.6 | 24.8 | (16.0) | 249.3 | 315.8 | 26.7 |
| சீனி மற்றும் இனிப்புவகைகள் | 22.5 | 24.3 | 8.0 | 344.6 | 258.0 | (25.1) |
| கடலுணவு | 19.1 | 18.3 | (3.9) | 237.3 | 217.5 | (8.3) |
| வாசனைத்திரவியங்கள் | 8.0 | 8.3 | 4.5 | 132.0 | 92.8 | (29.7) |
| பழவகைகள் | 6.3 | 7.5 | 18.6 | 73.7 | 84.7 | 14.9 |
| எண்ணெய் மற்றும் கொழுப்பு | 2.2 | 4.0 | 84.3 | 35.9 | 46.0 | 28.1 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 52.4 | 51.9 | (1.0) | 532.5 | 511.8 | (3.9) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 211.6 | 252.1 | 19.1 | 2,691.5 | 2,661.5 | (1.1) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 39.2 | 45.5 | 16.3 | 525.8 | 520.0 | (1.1) |
| ஊர்திகள் | 58.3 | 95.3 | 63.5 | 794.8 | 772.7 | (2.8) |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 20.0 | 27.1 | 35.7 | 247.1 | 281.2 | 13.8 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 26.2 | 24.2 | (7.6) | 365.8 | 369.0 | 0.9 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.5 | 18.6 | (13.4) | 270.7 | 258.2 | (4.6) |
| அழகுசாதனங்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள் | 6.9 | 6.7 | (4.0) | 86.8 | 77.4 | (10.8) |
| அச்சிடப்பட்ட பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 6.4 | 3.2 | (50.6) | 43.9 | 40.2 | (8.5) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 33.1 | 31.4 | (5.2) | 356.6 | 342.9 | (3.9) |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,003.6** | **1,193.8** | **18.9** | **9,870.0** | **11,435.8** | **15.9** |
| எரிபொருள் | 328.2 | 433.3 | 32.0 | 2,481.0 | 3,427.9 | 38.2 |
| இதில் மசகெண்ணெய் | 81.6 | 95.7 | 17.2 | 596.0 | 704.0 | 18.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 219.1 | 295.1 | 34.7 | 1,688.4 | 2,462.5 | 45.9 |
| நிலக்கரி | 27.5 | 42.5 | 54.7 | 196.7 | 261.5 | 32.9 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 73.8 | 95.4 | 29.3 | 514.4 | 772.4 | 50.1 |
| இதில் தங்கம் | 55.3 | 79.1 | 43.1 | 374.0 | 649.8 | 73.7 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 227.9 | 232.5 | 2.0 | 2,704.9 | 2,724.2 | 0.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 25.6 | 2.7 | (89.3) | 249.2 | 356.6 | 43.1 |
| கனிம உற்பத்திகள் | 21.0 | 9.6 | (54.5) | 222.1 | 211.1 | (4.9) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 15.0 | 20.9 | 39.6 | 221.4 | 298.0 | 34.6 |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 18.0 | 23.7 | 31.4 | 278.6 | 287.8 | 3.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.9 | 6.4 | 30.3 | 67.6 | 67.7 | 0.1 |
| வளமாக்கி | 7.3 | 16.2 | 121.7 | 136.9 | 102.8 | (24.9) |
| அடிப்படைஉலோகங்கள் | 59.9 | 125.1 | 109.0 | 456.1 | 628.7 | 37.8 |
| ஏனையவை | 221.8 | 227.9 | 2.8 | 2,537.9 | 2,558.5 | 0.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **457.2** | **418.8** | **(8.4)** | **4,980.8** | **4,894.7** | **(1.7)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொறி மற்றும் சாதனங்கள் | 251.1 | 229.6 | (8.6) | 2,740.7 | 2,620.6 | (4.4) |
| கட்டடப் பொருட்கள் | 148.1 | 130.9 | (11.6) | 1,568.7 | 1,591.4 | 1.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 55.4 | 57.9 | 4.6 | 662.9 | 674.9 | 1.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 2.6 | 0.4 | (83.4) | 8.5 | 7.8 | (7.8) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்ள** | **1.1** | **2.4** | **110.4** | **13.1** | **146.8** | **1,024.6** |
| **மொத்த இறக்குமதி** | **1,816.1** | **2,048.5** | **12.8** | **19,182.8** | **20,979.8** | **9.4** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை
(ஆ) திருத்தப்பட்டவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான பிரதான உட்பாய்ச்சல்களாகவிருந்த சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர்கள் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்களை அடுத்து வணிகப் பொருட்கள் ஏற்றுமதிப் பெறுகைகள் காணப்பட்டன. 2017ஆம் ஆண்டுக்காக குறித்த மாதத்தில் திசெம்பர் அதிகூடிய உல்லாசப் பயணிகளைப் பதிவுசெய்ததுடன் சுற்றுலா துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 419.5 மில்லியனாக[1] அதிகரித்தது. 2017 இற்கான மொத்த சுற்றுலாப் பயணிகள் வருகையின் 51.2 சதவீதத்திற்கு இந்திய, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் என்பன வகைகூறி முதல் உயர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் மூலங்கலாக தொடர்ந்தும் விளங்கின. 2017 இற்கான சுற்றுலா துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 3,631 மில்லியனாக விளங்கி 3.2 சதவீத அதிகரிப்பொன்றாகவிருக்குமென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளன.


தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017 திசெம்பரில் ஐ.அ.டொலர் 617 மில்லியனாக 1.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையொன்றில், பிரதான பணவனுப்பல் ஈட்டப்படும் நாடுகளின் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் தொடர்ச்சியான குறைவடைந்த பொருளாதார செயலாற்றல் என்பவற்றை பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017[2]இல் தொழிலாளர் பணவனுப்பலின் பேரிலான உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 7,164 மில்லியன்களாக விளங்கி 1.1 ஆண்டுக்கு ஆண்டு சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும்ம் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதன் 2017 இற்கான அளவீட்டுப் பெறுபேறுகளை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருப்தியமைக்கப்படும்.

[2] உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட திருத்திப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**


அரசாங்கப் பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளின் பேரிலான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான நீண்டகால கடன் உட்பாய்ச்சல்கள், நேரடி வெளிநாட்டு முதலீடு வடிவில் அம்பாந்தோட்டை துறைமுகப் பெறுகைகள் அதேபோன்று பன்னாட்டு நாண நிதியத்திலிருந்தான விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் கீழ் நான்காம் தொகுதியின் பெறுகை என்பன 2017 திசெம்பரில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கினை வலுப்படுத்துவதில் முக்கியமானதாகவிருந்தன.

அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள், தொடர்ச்சியாக பத்தாவது மாதமாக தேறிய உட்பாய்சலொன்றினைக் காட்டின. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளும் திசெம்பர் மாதத்திற்கும் 2017ஆம் ஆண்டிற்கும் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. எனினும், வெளிநாட்டு மீள்கொடுப்பனவு, உட்பாய்ச்சல்களை விஞ்சியிருந்தமையினால், அரசாங்க நீண்டகாலக் கடன்கள் (தேறிய) திசெம்பர் மாதத்திற்கும் அதேபோன்று 2017ஆம் ஆண்டுக்கும் ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இன் இறுதியளவில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியனை (4.6 மாத இறக்குமதிகளுக்கு சமமான) எய்தின. வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் 2016 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8.4 பில்லியனிலிருந்து 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனாக (6.0 மாத இறக்குமதிகளுக்குச் சமமான) அதிகரித்தது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

2017இல் ஐ.அ.டொலருக்கெதிராக 2.0 சதவீதத்தினால் பெறுமானத்தேய்வடைந்த இலங்கை ரூபா 2018 பெப்புருவரி 21 வரை 1.6 சதவீதத்தினால் மேலும் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கு ரூபாவின் செலாவணி அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: ஏனைய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 பெப்புருவரி 20 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -1.6% |
| யூரோ | -13.5% | -5.2% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -5.3% |
| யப்பானி யென் | -5.1% | -6.8% |
| கனேடியன் டொலர் | -8.6% | -1.5% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -3.0% |
| இந்தியன் ரூபா | -7.5% | -1.3% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி